**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 28/2013**

DW1 – செல்வமணி (எ) மகாராஜன்    த/பெ கண்ணப்பன்
நாள்–10.01.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. எனது தகப்பனார் பெயர் கண்ணப்பன் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருந்த காலத்தில் எனது தகப்பனார் இறந்து விட்டதால் 5 முதல் 8 பிரதிவாதிகள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். நான் எனது தம்பி மற்றும் சகோதரிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நீலாவதியின் மாமியார் பெயர் தெரியுமா என்றால் ராஜம்மாள் ஆகும்.

தாவா வழக்கு எத்தனை செண்டுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 10 செண்டுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியுடைய 10 செண்டுக்கு வடக்கால் தான் எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்றால் சரிதான். வாதியின் மனை எங்களுடைய மனை அனைத்தும் பழைய புல எண் 54/2 என்றால் சரிதான். புல எண் 54 /2 ன் மொத்த பரப்பளவு தெரியுமா என்றால் தெரியாது. புல எண் 54/2 தான் பின்னிட்டுபுல எண் 54/2A, புல எண் 54/2B, புல எண் 54/2C, புல எண் 54/2D, புல எண் 54/2E என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவுகள் நில உடமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

எனது சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண் 54/2D ஆகும். புல எண் 54/2D ன் மொத்த பரப்பளவு தெரியுமா என்றால் 4 செண்ட் ஆகும். புல எண் 54/2D எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதற்கு என்ன ஆவணம்

தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதற்கான பத்திரம், வரைபடம் தாக்கல் செய்துள்ளேன்.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.